உ









# பூர்ண பலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாத வெளியீடு

(சித்திரை – APRIL – 2023)




ஸ்ரீ மகா பெரியவா பூர்ண பலத்துடன்

“லோகா சமஸ்தா சுகினோ பவந்து”

“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்”



nbn-COMMERCIAL

# உள்ளடக்க அட்டவணை

தோரண வாயில் .......... 4

தென்னிந்திய - மஹாமஹோபாத்யாயர்கள் .......... 5

உழைப்பின் உயர்வு .......... 12

ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்களின் திருத் தொண்டர்கள் .......... 14



nbn-COMMERCIAL

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணை ஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன் நண்பர்கள்

படங்கள் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரண வாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு இதய பூர்வமான வாழ்த்துக்கள் - வணக்கங்கள் - ஆசிகள்.

வேலைப்பளு, மற்றும் சில காரணங்களால், இரு மாதமாக தங்களை சந்திக்க இயலவில்லை. இந்த சித்திரை தொடங்கி, இனி வரும் காலங்களில் தவறாது சந்திக்க விரும்புகிறேன்.

இந்த சித்திரை தொடங்கி இனி வரும் காலமே பண்டிகைகள்தான். அங்கங்கே கோவில் திருவிழாக்கள், தேரோட்டம் போன்ற கொண்டாட்டங்களுக்கு பஞ்சம் இருக்காது. அவரவர்களுக்கு தங்கள் வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்ப இறை விழாக்களில் பங்கெடுத்து கொள்ளுங்கள்.

மறுபடியும் கொரோனா அலை வரும் என்கிறார்கள். எனவே கூட்டங்களை தவிர்த்து, முகக்கவசம் அணிந்து பாதுகாப்பை இருங்கள். இறைவன் எல்லோருக்கும் எல்லா நலன்களையும் வழங்க வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி. வேணுகோபால்

*(குறிப்பு) இந்த இதழில் இருந்து சிறப்பு அம்சமாக, 1999-ல் ஸ்ரீ அ. குப்புஸ்வாமி அவர்கள் எழுதிய "ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவர்களின் திருத் தொண்டர்கள்" என்ற புஸ்தகம், பக்கம் பக்கமாக தட்டச்சு செய்து வெளியிடுகிறோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மிகவும் அற்புதமான புஸ்தகம். பெரியவா தனக்கு ஆரம்ப காலத்தில் வேதம் போதித்த ஆசிரியர்கள் முதல் தனக்கு பல்லக்கு தூக்கி வந்த "போகிகள்" ஸ்ரீ மடத்தில் காரியம் செய்தவர்கள், சமையற்காரர் வரை ஒருவரையும் விடாமல் நினைவு கூர்ந்து இருப்பது பெரியவாளின் கருணையை பிரதிபலிப்பதாக உள்ளது. தவறாது படித்து பயன் பெறுங்கள்.*

*****



nbn-COMMERCIAL

# தென்னிந்திய - மஹாமஹோபாத்யாயர்கள்

*முகவுறை*

நம் நாட்டைப் பிரிட்டிஷ் அரசி விக்டோரியா மஹாராணி ஆட்சி செய்த காலத்தில் 1887-ஆம் ஆண்டு முதல் சற்றேறக்குறைய நாடு சுதந்திரமடைந்த காலம் வரை, சிறந்த “ஸம்ஸ்க்ருத மஹுாரவித்வான்களுக்கு "மஹாமஹோபாத்யாய" என்ற பிருது, அதற்குரிய சில சின்னங்களுடனும், ஸன்மானத்துடனும் வழங்கப்பட்டு வந்தது. தற்காலத்தில் இந்த பிருது. பெற்றவர் எவருமே உயிருடன் இல்லையென்றே கூறலாம். இத்தகைய மஹாவித்வான்களில் சில வடஇந்தியர்களையும், சில தென் இந்தியப் பெரியோர்களையும் கண்டு களிக்கவும், அவர்களுடன் நெருங்கி மரியாதை செலுத்தவும், பல் ஆண்டுகளுக்கு முன், அடியேனுக்கு வாய்ப்புகள் ஏற்பட்டன. கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் ஸம்ஸ்க்ருத ஆசிரியராகப் பணியாற்றிய மஹாம்ஹோபாத்யாய ராயம்பேட்டை க்ருஷ்ணமாசாரியார் அவர்களிடம் இரண்டு ஆண்டுகள் (கல்லூரியில் படித்துவரும் காலத்தில்) ஸம்ஸ்க்ருதம் படிக்க எனக்கு ஏற்பட்ட வாய்ப்பை ஒரு பெரும் பாக்யமாகவே நான் கருதுகிறேன்.

சுமார் நாற்பத்துமூன்று பன்ர னட்த முன் காசி க்ஷேத்திரத்திலும், கல்கத்தா மாநகரிலும் சில மஹா மஹோபாத்யாயர்களான மஹாவித்வான்களைக் கண்டுகளித்தேன். அவர்களுள் ஒருவர் ஸ்ரீ ஹரிதாஸ் பட்டாச்சார்யா. இவர் ஸம்ஸ்க்ருதத்தில் பல நூல்களை இயற்றியும் மஹாபாரதம் முழுவதிற்கும் வங்காளி மொழியில் உரை எழுதியும் வெளியிட்டுள்ளார். அவருடைடைய குமாரர் ஹேம்சந்த்ர பட்டாச்சார்யா, வடஇந்தியாவில் மஹா மஹோபாத்யாய பிருது பெற்ற மஹாவித்வான்களில் நூற்றுக்கதிகமானவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்து, பிரசுரித்துள்ளார். சென்ற ஆண்டில், அவர் என்னைத் தென்இந்தியாவில் திகழ்ந்த மஹாமஹோபாத்யாயர்களான வித்வான்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் எழுதித்தரவேண்டுமெனக் கடிதம் எழுதினார். அவருடைய கடிதங்கள், அடியேனின் மனதில் தென்னாட்டில் வாழ்ந்து, புகழடைந்து, மஹாமஹோபாத்யாயபிருது பெற்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளை, முதலில், தமிழில் வெளியிடலாம் என்ற அவாவிற்கு வித்திட்டன.

இம்முயற்சியைத் துவக்குமுன் ஸ்ரீ காஞ்சீ காமகோடி ஸ்ரீ பெரியவர்களிடம், என் உத்தேசத்தை விக்ஞாபித்துக்கொண்டபோது அந்த தவத்திரு மஹானின் அனுக்ரஹமும் பெரும் கருணையுமே, அடியேனை, இம்முயற்சியில் மேலும் ஊக்குவித்ததுடன், பெயர்களையே கேட்டிராத பல வித்வான்களைப் பற்றிய விவரங்கள் கிடைக்கும்படியும் செய்தன.

இந்நூல் மிகச்சிறியதாயினும், இதிலுள்ள விவரங்களைச் சேகரிப்பது மிகவும் கடினமான பணியாயிற்று எனக்கூறிடின், அது மிகையாகாது. இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ள மஹாவித்வான்களின் வாழ்க்கைக் குறிப்புகள்யாவும் பல பெரியோர்கள், நண்பர்கள், மஹாமஹோபாத்யாயர்களாகத் திகழ்ந்தவர்களின் ஸந்ததியார்கள், ஆகியோர் கொடுத்துதவிய தகவல்களிலிருந்தும், பிற சில ஸஞ்சிகைகளிலோ, புத்தகங்களிலோ கிடைத்த



nbn-COMMERCIAL

விஷயங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டனவேயன்றி, இதில் என்னுடைய தனிப்பட்ட முயற்சி, தகவல்களைச் சேகரித்து, புத்தக உருவாக்கியது தவிர, வேறு ஒன்றுமில்லை. இதில் எனக்குப் பெரிதும் உதவியளித்து ஊக்கம் தந்தவர் பலர். அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படிப் பேருதவியளித்தவர்களின் எண்ணிக்கை அதிகம். ஆகையால் அவர்களது பெயர்களை. ஒரு பட்டியலாக அடுத்துத் தனியே கொடுத்துள்ளேன். இந்த சிறு நூலில் தவறுகள் ஏதும் காணப்படுமாயின் அவைகளுக்கான பொறுப்பு முழுதும் என்னுடையதே. மேலும் சில மஹா வித்வான்களின் வரலாறுகள் இடம் பெருதும் போயிருக்கலாம். தவறுகளை மன்னித்து, என்னை ஆசீர்வதிக்கும்படி நூலைப்படிக்கும் நேயர்களை வேண்டுகிறேன்.

இந்த நூலைத் தொகுக்க ஆரம்பித்த காலத்தில் இந்த முயற்சி தேவைதானா என எனக்கு ஸந்தேஹம் ஏற்பட்டது, ஆனால் பின்னர், இச்சிறு நூலில் இடம் பெற்றுள்ள மஹான்களின். சிலருடைய ஸந்ததியார்களுக்கே அப்பெரியோர்களைப் பற்றிய விவரங்கள் தெரியாத நிலையை நான் கண்ட போது, என் ஐயம் மறைந்தது. எப்படியாவது முடிந்த வரை தகவல்களைச் சேகரித்துப் புத்தகத்தைப் பிரசுரிக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாயிற்று.

இந்தப் புனிதப்பணியில் என்னை ஊக்குவித்த ஸ்ரீ காஞ்சீப் பெரியவர்களின் திருவடிகளில் எனது சாஷ்டரங்க வந்தனங்களுடன் இந்நூலை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன், இச்சிறு நூலுக்கு ஸ்ரீமுகம் வழங்கி அனுக்ரஹித்துள்ள காஞ்சீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய திருவடிகளுக்கு வந்தனங்களை ஸமர்ப்பித்துக்கொள்கின்றனன், இதற்கு மதிப்புரை வழங்கியுள்ள கும்பகோணம் அத்வைத ஸபா பண்டிதர், திருவியலூர் பண்டிதராஜ சாஸ்த்ரரத்னாகர, ந்யாய வேதாந்த வாகீச, ஸ்ரீ V. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளுக்கு எனது பணிவும்,நன்றியும் கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் எனது முயற்சி பயன்பெற உதவிய நண்பர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

திருச்சிராப்பள்ளி அ. குப்புஸ்வாமி
4-5-77

*****

***ஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் என்ற தியாகராஜ தீக்ஷிதர்***

தமிழ் நாட்டில் பொதுமக்கள் ஒரு சிறந்த அறிஞரின் பெயரையே சொல்லக்கூசுவர். பொதுவாகப் "பெரியவர்" "சாஸ்திரிகள்வாள்" என்று தான் அம்மஹாவித்வானைப் பற்றி கூறுவார்கள். அவர்தான் தியாகராஜதீக்ஷிதர் அவரை "ராஜு சாஸ்திரிகள்" என்றே பொது ஜனங்களறிவர்.

ராஜு சாஸ்திரிகள் அத்வைத வேதாந் தத்தின் பிரசாரத்தில் மிகப் புகழுடன் திகழ்ந்த அடயபலம் அப்பய தீக்ஷிதர் வம்சத்தில் ஒன்பதாவது தலைமுறையினராகத் தோன்றியவர். கமலாலயமெனும் திருவாரூரையடுத்த கூத்தம்பாடி எனும் கிராமத்தில் (தஞ்சாவூர் ஜில்லா)



nbn-COMMERCIAL

இன்றைக்குச் சற்றேரக்குறைய 160 ஆண்டுகளுக்கு முன்னர் 1815-ஆம் ஆண்டு (யுவ வருஷம்) மே மாதம் 28-ஆம் நாள் இவர் பிறந்தார். *இவருடைய தகப்பனார் மார்க்கஸஹாய அப்பாதீக்ஷிதர் (அப்பய தீக்ஷிதர்) வ்யாகர்ணத்திலும், தர்ம சாஸ்திரத்திலும் வல்லுனர். தந்தைதனயனுக்குத் திருவாரூர் பதியின் சிவமூர்த்தியான தியாகராஜனின் பெபெயரைரச் சூட்டினார். ஆனால் தாய் தந்தையரும் பிறரும் குழந்தையை 'ராஜு' என்ற செல்லப்பெயராலேயே அழைத்து வந்ததால் அப்பெயரே தியாகராஜருக்குக் கடைசி வரையில் வழக்கில் நீடித்து விட்டது.

** சிலநூல்களில் 1813 கி. பி, எனக் காணப்படுகிறது.*

ஏழாம் பிராயத்தில் உப நயனம் செய்விக்கப்பட்ட தியாகராஜர் வேதாத்யயனம் செய்ய ஆரம்பித்தார். இரண்டாண்டுகளுக்கு ப்பின்னர் அன்னார் தந்தையிடம் சிறிது சிறிதாகச் சில ஸம்ஸ்கிருதக் காப்பியங்களையும் வ்யாகர்ண ஸூத்ரங்களையும் கற்றுவந்தார். சிலஆண்டுகளுக்குப்பின்னர் தியாகராஜர் கும்பகோண நகரத்தில் தங்கி சின்னண்ணா. தீக்ஷிதர் என்பாரிடம் வ்யாகர்ண மஹாபாஷ்யத்தைக்கற்று வந்தார். மேலும் அவ்வூரிலேயே வாழ்ந்த ரகுநாத சாஸ்திரியாரிடம், பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தையும் கற்றறிந்தார். ஒருக்கால் இவர் தம் தாய்மாமன் வசித்து வந்த மன்னார் குடிக்குச் சென்று, மாமன் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தார், ஒரு நாள் அங்கு சில காலமாக வசித்து வந்த தாராயணேந்த்ர ஸரஸ்வதீ என்ற துறவியைத் தரிசித்து வணங்கினார். துறவிக்கும் அறிஞ இளைஞருக்குமிடையே தொடர்பு ஏற்படவே, ராஜு அத்துறவியிடம் தர்க்க சாஸ்திரத்தைப் படிக்கத் துவங்கினார். இது முதல் நமது வித்வான் மன்னார்குடியிலேயே பலகாலம் வசிக்கலாயினர். ஸ்வயம்ப்ரகாச ஸ்வாமிகளிடம் வேதாந்த சாஸ்திரம் பமின்றார். மன்னார்குடியைச் சார்ந்த ஹரித்ராநதிப்பகுதியில் திகழ்ந்த கோபாலாசார்யாரிடம், "முக்தாவளி", "ஈசதாதரீயம்" போன்ற நூல்களையும், சில வைணவ தத்வ நூல்களையும் படித்து முடித்தார். இவ்வாறு இளமையிலேயே சுமார் இருபது வயதிற்குள், ராஜு சாஸ்திரிகள் சிறந்த வ்த்வத்ஜைக் காட்சியளித்தார்.

பயிற்சிகள் யாவும் முடிவடைந்தபின் சாஸ் திரிகள் மன்னார்குடியை விட்டு தம்மூருக்குச் செல்லத் தீர்மானித்தார். ஆனால் மன்னார்குடி வாசிகளான சில செல்வந்தரும், மற்றும் பலரும் இத்தகைய மாபெரும் இளம் அறிஞர் தங்கள் ஊரை விட்டுச்செல்வதை விரும்பாது, அன்னாரை மன்னார்குடியிலேயே எப்போதுமிருக்க வேண்டுமெனப் பலவாறாக வேண்ட, சாஸ்திரிகளும் அதற்கிசையவே, தியாகராஜர் அன்றுமுதல் மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளாக மன்னார்குடியிலேயே வாழ்ந்து வந்தார். இன்றும் * மன்னார்குடி ராஜு பம்பட்டுகளாகவே" மப்புல மனதில் திகழ்ந்து வருகிருர்.

1836-ஆம் ஆண்டில் ஆண்டுதோறும் புதுக்கோட்டையில் நடைபெற்று வந்த நவராத்திரி ஸதஸாக்கு, புதுக்கோட்டை மன்னரால் சாஸ்திரிகள் அழைக்கப்பட்டார். ஸதஸில் கூடியிருந்த. குப்பாசார்யார் போன்ற மாபெரும் வித்வான்கள் இருபது வயதே பூர்த்தியாகிய ராஜு சாஸ்திரிகளினால் வாதில் வெல்லப்பட்டனர். சிலஆண்டுகள் கழிந்தன. அநேக இளைஞர்கள்



nbn-COMMERCIAL

ராஜா: சாஸ்திரிகளிடம் கல்வி பயிலவந்து கூடினர். சாஸ்திரிகளின் முக்ய சீடர்கள் பின்வருபவசாவர்: -

1. பிற்காலத்தில் சிறந்த ந்யாய சாஸ்த்ர வித்வானாகவும், மஹாமஹோபாத்யாய விருது பெற்றவருமான ஹரி ஹர சாஸ்திரி
2. சிறு வயதிலேயே புகழும் சிறந்த அறிவும் அடைந்து, பல நூல்களை இயற்றிய பைங்காநாடு கணபதி சாஸ்திரி
3. கிருஷ்ணமாசார்யார்
4. நடுக்காவேரி ஸ்ரீனிவாஸ சாஸ்திரி
5. பின்னர் மஹாமஹோபாத்யாய விருது பெற்ற பழமார்நேரி ஸுந்தர சாஸ்திரி
6. ராமாயாணச் சொற்பொழிவுகளில் பிற்காலத்தில் சிறந்து விளங்கிய பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரி
7. ஆங்கரை ஸுப்பராய சாஸ்திரி
8. ஆந்திர தேசத்தைச் சேர்ந்த அக்நிசித் ராமகிருஷ்ண சாஸ்திரி. ராஜு சாஸ்திரிகளிடம் வேதாந்த பாடம் கேட்டவர்களுள் சில துறவிகளும் உண்டு. அவர்களுள் முக்கியமானளவர் மஹாதேவ ஆச்ரமியாம்.

1885-ஆம் ஆண்டில் ராஜு சாஸ்திரிகள் ஸோமயாகம் செய்து புகழடைந்தார். 1887-ஆம் ஆண்டில் லண்டனில் இங்கிலாந்து மஹாராணி விக்டோரியாவின் ஆட்சியின் பொன்விழா நடத்தப்பட்டது. அதையொட்டி இந்தியாவில் பல நகரங்களில் அவ்விழாக் கொண்டாடப்பட்டது. அந்த ஸமயத்தில் சாஸ்திரிகளவர்களுக்கு "மஹாமஹோபாத்யாய" விருது பிரிட்டிஷ் இந்திய ஆட்சியினரால் வழங்கப்பட்டது. ராஜு சாஸ்திரியாரின் மேதாவிலாஸத்தையும், அவரிடம் மக்களுக்கு இருந்த பெரும் நன்மதிப்பையும் அறிந்த தஞ்சைக் கலெக்டர் (ஆங்கிலேயர்) மன்னார்குடி சென்று சாஸ்திரியாருக்கு “மஹாமஹோபாத்யாய" விருதை ஸமர்ப்பித்ததாகத் தெரிகிறது.

1895-ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் காஞ்சி காமகோடி பீடத்தின் அறுபத்தாராவது ஆசார்யர்களாக விளங்கிய ஸ்ரீமத்சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆசியுடன் அத்வைத ஸபை என்ற ஒரு நிறுவனம் துவக்கப்பட்டது. அது முதல் ஏழாண்டுகள் அந்த ஸபையின் வளர்ச்சியிலும், பிரதி வருட ஸதஸ்களிலும் சாஸ்திரியார் முக்கியப் பங்கு கொண்டு ஸபையை ஊக்குவித்தார்கள். 1902-ஆம் ஆண்டுக் கடைசியிலிருந்து இப்பெரியாரின் உடல் நிலை சீர்குலையத் தொடங்கியது. தக்க சிகிச்சையளித்தும் அவர் ஆரோக்யத்தைத் திரும்பப் பெறவில்லை. அவர் 1903 ஆண்டு மார்ச் மாதம் நான்காவது நாள் (சுபக்ருத் ஆண்டு மாசி மாதம் 21-ஆம் நாள்) புதன்கிழமை சுக்லபக்ஷ சஷ்டி நள்ளிரவில் இறைவனடி சேர்ந்தார்.

இருபத்திரண்டாம் வயதிலேயே ராஜு சாஸ்திரிகளுக்கு திருமணம் நடந்தேறியது. ஆனால் சில ஆண்டுகளில். முதல் மனைவியை இழந்ததால் ஸுந்தரி என்ற பெண்ணை இரண்டாம் மனைவியாகக் கொண்டார். இவருக்கு இம்மனைவியிடம். இரண்டு பெண் குழந்தைகளே



nbn-COMMERCIAL

ஏற்பட்டனர். 1866-ஆம் ஆண்டில் தன் வயது முதிர்ந்த தந்தை மார்க்கலஹாய அப்பயதீக்ஷிதரின் விருப்பப்படி சாஸ்திரியார் தன் தம்பியின் மகனான நீலகண்டனை ஸ்வீகாரம் செய்துகொண்டார். உற்வினரிடமும் நண்பர்களிடமும் மிகவும் அன்புடன் பழகுவது சாஸ்திரியாரின் சிறப் விரகஸில் ஒன்று. அத்வைத வேதாந்தத்தைக் கற்பிப்பதில் இவர் சிறந்த வல்லுனர். தர்மசாஸ்திரத்தில் மிகப் பெரிய அறிஞரெனத் தென்னாடு முழுவதிலும் புகழ்பெற்றவர்.

ஸம்ஸ்கிருத மொழியில் முப்பது நூல்கள் இயற்றியவர் சாஸ்திரியார். சாந்தோக்யோபநிடதத்தின் ஸாரத்தைக் கொண்ட 'ஸத்வித்யா விலாஸம்', நியாய பாஸ்கரமெனும் வைணவ தத்வ நூலின் கருத்தை விமர்சித்து, கண்டிக்கும் "ந்யாயேந்துசேகரம்"; "ஸாமருத்ரஸம்ஹிதா பாஷ்யம்", "சிவதத்வ விவேக தீபிகை", திகுவாருர் ஸ்ரீ தியாகராஜரின் தோத்திரமாகிய 'த்யாகராஜஸ்தவம்', 'வேதாந்த வாதஸங்ரஹம்' போன்றவை சாஸ்திரியார் இயற்றிய முக்ய நூல்களாம். இப்பெரியார் மண்ணுலகை நீத்து எழுபதாண்டுகளுக்கு மேலாயினும் அன்னாரின் புகழும் பெயரும் தமிழ்நாட்டில் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்ற தென்பது மறுக்க முடியாத உண்மை.

***ஸ்ரீ கிருஷ்ண தாதாசார்யார்***

காஞ்சீபுரமெனும் திவ்யத் திருப்பதியிலும், அதைச் சுற்றியுமுள்ள ஆழ்வார்களின் மங்களாசாஸனம் பெற்ற 14 விஷ்ணு க்ஷேத்ரங்களுள் காஞ்சிக்கு வெளியே ஏழுமைல் தென்மேற்கில் (தொண்டை நாட்டில்) திருப்புட்குழி என்ற பாடல் பெற்ற வைணவத் திருப்பதி யொன்றுள்ளது. இப்புனிதச் சிற்றூரில் 1829-ஆம் ஆண்டில் கிருஷ்ணதாதாசாரியார். என்ற மஹாவித்வான் தோன்றினார். இவருடைய தந்தயார் வேங்கட குரு என்னும் கோபால தாதாசாரியார். இளமையிலே கிருஷ்ணதாதாசாரியார் நல்ல மதிநுட்பமும் ஞாபகசக்தியுமுடையவராகக் காணப்பட்டார். இவரை "அய்யா" என்ற பெயராலேயே அழைப்பது வழக்கமாம்.

உபநயனம் செய்விக்கப்பட்டபின் திவ்யப்ரபந்தங்களைக் கற்றார். பின்னர் கோபாலதாதாசாரியாரிடம் ஸாஹித்ய சாஸ்திரத்தைப் படித்துத் தேர்ச்சி பெற்றார். திவப்ரதீப வேங்கடாசாரியார் என்ற அறிஞரிடம் ந்யாய சாஸ்திரத்தைப் பயின்றார். ஜடப்ரோலுரங்காசார்யாரிடம் வியாகர்ணம் படித்தார். பிறகு மௌஸாலகட்ட ஸ்ரீனிவாஸராகவாசாரியார் என்ற வித்வானிடம் மீமாம்ஸா சாஸ்திரத்தைக்கற்றார். பின்னர் தாதாசாரியார் ஸ்ரீரங்கத்தையடைந்து ஸ்ரீமத் பெரியாண்டவன் ஸ்ரீனிவாஸ யோகீந்த்ர ஸ்வாமியிடம் விசிஷ்டாத்வைத வேதாந்த பாடம் படித்தார்.

இப்படி பலவித சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்ற 'இவர்' நெல்லூருக்கருகாமையிலுள்ள வேங்கடகிரி ஸமஸ்தானத்தில் சில ஆண்டுகள் ஆஸ்தான வித் வானாகத் திகழ்ந்தார். தனது பிற்காலத்தைக் காஞ்சியம்பதியிலும் திருபுட்குழியிலுமாகக் கழித்தார். காஞ்சீபுரத்தில், சிறிது காலம் ஸ்ரீவரதராஜப் பெருமானின் ஆலய நிர்வாக அதிகாரி யாகக் கைங்கர்யம் செய்தார், 1887-



nbn-COMMERCIAL

ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசியாகவும், இந்திய தேசத்தின் சக்ரவர்த்தினியாகவும் திகழ்ந்த விக்டோரியா மஹாராணியின் ஆட்சியின் பொன்விழா நடந்தபோது கிருஷ்ணதாதாசாரியாருக்கு இந்திய அரசு "மஹாமஹோபாத்யாய" என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது. தமது அறுபத்தாறாவது வயதில் 1889-ஆம். ஆண்டில் இவ்வறிஞர் பரமபதமடைந்தார்.

இவர் மைஸார் ராமாசாஸ்திரியார் இயற்றிய "ஸத்ப்ரதிபக்ஷ" என்ற நூலைக்கண்டித்து "சதகோடி கண்டனம்" (பராமுகசபேடிகம) என்ற நூலை இயற்றியுள்ளார். குமாரில பட்டர் எழுதிய -பட்டபாத வார்த்திகத்தின்' அதிகரணங்களின் ஸாரத்தை வடித்து இவ்வறிஞர் எழுதிவைத்திருந்த 'பாட்டஸாரம்', என்ற நூல் இவருடைய மஸறவுக்கு இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப்பின், 1912-ஆம் ஆண்டில் ஸ்ரீரங்கத்தில் அக்காலத்தில் பிரசுரமாகி வந்த "ஸஹ்ருதய" எனும் ஸஞ்சிகையில் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டது.

### *ஸ்ரீ ஹரிஹர சாஸ்திரிகள்*

தமிழ் நாட்டின்கண் வைண்வப் பதிகளில் ஒன்றான ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள திருக்கோஷ்டியூரில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஹரிஹர சாஸ்திரிகள் பிறந்தார். இவருடைய முன்னோர்கள் வேதவித்பன்னர்கள். இருபது வயது வரை பிறந்த ஊரிலேயே வசித்து, தன்னுடைய பாட்டனாரிடம் வேதம் பயின்றார் பின்னர் அவ்வூசிலேயே வேதாந்தாசாரியார் என்பவரிடம் காவ்ய நாடகங்களைப் படித்து, ஓரளவு தர்க்க மும்வ்யா கர்ணமும்பமின்வுறார். தமது இருபத்தொன்றும் வயதில் திருவிடைமருதூருக்குச் சென்று, அண்ணா வாஜபேயர் என்ற வித்வானிடம் வ்யாகர்ண சாஸ்திரத்தைப் படித்து முடித்தார், அதன் பின்னர் மன்னார்குடி சென்று பெரியவர்களான ராஜு சாஸ்திரிகளிடம் பூர்வ மீமாம்ஸை யையும் உத்திர மீமாம்ஸையையும், ஸ்ம்ருதிகள், புராணங்கள், ச்ரௌதம் முதலியவைகளையும் கற்றறிந்தார்.

பிறகு சாஸ்திரியார் மன்னார்குடியிலிருந்து கும்பகோணம் வந்து சேர்ந்தார். ஆங்கு ப்ரஹ்மானந்தீயம், ப்ரஹ்மவித்யாபரணம், ஸித்தாந்த பிந்து, ப்ரம்ஹஸுத்ர வருத்தி, போன்ற அத்வைத நூல்களைப் பரிசோதித்து அச்சிடச் செய்தார். இப்படி அச்சிடப்பட்ட நூல்களில் அத்வைத சபையினால் ப்ரசுரிக்கப்பட்ட "ந்யாயேந்துசேகரம்" என்ற நூலின் இரண்டாம் பகுதி மிக முக்யமானது கும்பகோணத்தில் தங்கிய காலத்தில், சாஸ்திரிகள் அத்வைத ஸபையின் முக்கிய ஆய்வாளராக இருந்து வந்தார். ஸபையின் வளர்ச்சியில் இவருக்கு முக்கியப் பங்கு உண்டு. காள ஹஸ்தி அத்வைத ஸபையிலும் சுமார் பத்தாண்டுகளுக்கு முக்கிய பரீக்ஷகராக விளங்கினார்.

பின்னர் சாஸ்திரியார் சிதம்பரத்தில் ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலையின் ஆசிரியராக இருந்து வந்தார். இக்காலத்தில் தென்னாட்டின் பல பகுதிகளிலிருந்து பல இளைஞர்கள் சிதம்பரம்வந்து தங்கி, ஹரிஹர சாஸ்திரிகளிடம் கல்வி பயின்றனர். இவர்களுள் தேதியூர் ஸுப்ரஹ்மண்ய



nbn-COMMERCIAL

சாஸ்திரிகளும், "கேரளத்தைச் சேர்ந்த நூரணி அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளும், கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளும், இஞ்சிக்கொல்லை ஜகதீச சாஸ்திரிகளும், போலகம் ராமா சாஸ்திரி களும் முக்கியமானவர்கள். சிதம்பர வாஸத்திற்குப் பின் ஹரிஹர சாஸ்திரிகள் மைஸூர் ராஜ்யத்தில் ஒருகல்லூரியில் வேதாந்த ஆசிரியராகப் பணியாற்றினார். அங்கேயே பல ஆண்டுகள் சாஸ்திரியார் வசித்துவந்தார்.

இவருக்கு இந்திய அரசாங்கம் 'மஹாமஹோபாத்யாய' பட்டத்தை வழங்கியது. இவருடைய போதனா முறையை பிற வித்வான்களும், இவருடைய சீடர்களும் பெரிதும் போற்றுவர். இவருடைய முயற்சியால்தான் பல அத்வைத க்ரந்தங்கள் அச்சிட்ட நூல்களாக உருக்கொண்டன.



nbn-COMMERCIAL

# உழைப்பின் உயர்வு

அனைவருக்கும் நமஸ்காரம்!!

மலையும் மலையைச் சார்ந்த இடம் குறிஞ்சி என்று பழங்காலத்தில் கூறுவார்கள். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் குறிஞ்சி மலர் அங்கு தான் மலரும். அத்தகைய ஊர் ஒன்றில் ஓர் ஏழை குடும்பம். ரமேஷ் தன் வயதான தாய் தந்தையுடன், மனைவி கீதா, மகன் சுரேஷ் உடன் ஒரு குடிசையில் வசித்து வந்தான். ரமேஷ் படிப்பறிவு இல்லாதவன். ஆகவே கூலி வேலைக்கு சென்றான். அவன் வாங்கும் கூலியில் குடும்ப செலவுகளை நடத்த கீதா மிகவும் சிரமப்பட்டாள். சுரேஷ் அங்குள்ள நகராட்சி பள்ளியில் நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவன் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதை கவனமாக கேட்டு நன்கு படிப்பான். தெரியாத மாணவர்களுக்கும் சொல்லியும் கொடுப்பான்.

கீதா எங்காவது வேலைக்கு செல்லலாம் என்றால் அவளுக்கு தோட்ட வேலைகள் தெரியாது. யார் வீட்டில் ஆவது வீட்டு வேலைகள் செய்யலாம் என்றால் எல்லோருமே ஏழைகள். அவரவர் வீட்டு வேலைகளை அவர்களே செய்து விடுகிறார்கள். கீதா மலை மீதுள்ள சிவன், முருகன் இருக்கும் கோவிலுக்கு அடிக்கடி செல்வாள். பிரதோஷ காலத்தில் சிவனுக்கு. பலர் பூஜைக்காக பால், தயிர் பன்னீர், இளநீர், பூ, பழங்கள் போன்றவற்றை வாங்கித் தருவார்கள். இவளிடம் பணம் அதிகம் இல்லாத காரணத்தால் தயிர் ஒரு பாக்கெட் வாங்கித் தருவாள். சிவபெருமானையும், நந்தி தேவரையும் மனதால் நினைத்து' ஓம் நமச்சிவாயா' என்று கூறி' எனக்கு ஒரு வழி காட்டுங்கள்' என்று வேண்டுவாள். அங்குள்ள முருகப்பெருமானையும் வேண்டுவாள்.

ஒரு நாள் வெளியூரிலிருந்து வந்த சுற்றுலா பயணிகள் இந்த கோவிலுக்கு வந்தார்கள். அவர்கள் கோவிலில் சாமி கும்பிட்டபின் அனைவரும் புல்வெளியில் அமர்ந்து மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் கீதா, சுரேஷ் இருவரும் கோவிலுக்கு வந்தார்கள். சுரேஷ் உடன் பள்ளியில் படிக்கும் சில மாணவர்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் விளையாடினார்கள். சுற்றுலாவில் வந்திருந்த குழந்தைகளும் விளையாடினார்கள். இதையெல்லாம் கீதா கவனித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு பையன் சுரேஷை பார்த்து' உன் அப்பா அம்மா என்ன செய்கிறார்கள்' என்று கேட்டான். அதற்கு சுரேஷ்' என் அப்பா கூலி வேலை செய்கிறார்' என்றான். அந்தப் பையன்' என் அப்பா ரைஸ் மில்லில் வேலை செய்கிறார். என் அம்மா ஒர்க் ப்ரம் ஹோம்' என்றான். சுரேஷ், கீதாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. அதற்கு அந்தப் பையன்' என் அம்மா வீட்டில் இருந்தே கூடை பின்னுவது, ஆடைகள் தைப்பது போன்ற தெரிந்த வேலைகளை செய்து சம்பாதிக்கிறார்கள்' என்றான். உடனே கீதாவிற்கு தானும் ஏதாவது வீட்டிலிருந்தே வேலை செய்யலாம் என்று தோன்றியது.



nbn-COMMERCIAL

சுற்றுலாவில் வந்திருந்த செல்வம் என்ற பெரியவர் ஒருவர் குழந்தைகளை எல்லாம் அழைத்து' குழந்தைகளே உங்கள் அனைவருக்கும் ஒரு போட்டி வைக்கிறேன். வெற்றி பெற்றவருக்கு ரூபாய் 200 பரிசாக கொடுக்கிறேன் 'என்றார். குழந்தைகளுக்கு மிக்க மகிழ்ச்சி. செல்வம்' நீங்கள் அனைவரும் அறுபது படிகள் கொண்ட இந்த கோவிலில் ஏறி பிறகு இறங்கி இங்கு வரவேண்டும். முதலில் வருபவருக்கு பரிசு' என்றார்.

அனைவரும் வரிசையாக நின்றனர். பிறகு செல்வம்' ரெடி' என்று கூறியவுடன் அனைவரும் விரைவாக படிகளின் மீது ஏறினர். படிகள் கரடு முரடாக இருக்கும். சுரேஷ் படிகளின் மீது விரைவாக ஏறினான். இருபது ஏறியவுடன் கால் மிகவும் வலித்தது. அவனுக்கு அழுகையே வந்துவிட்டது. உடனே இறைவனை வேண்டி எப்படியாவது வெற்றி பெற்று பரிசை அம்மாவிடம் கொடுக்க வேண்டுமே. ஆசிரியர் சொல்லிக் கொடுத்த' முயற்சி இருந்தால் முடியாதது எதுவும் இல்லை என்பதை எண்ணி படிகளில் விரைவாக ஏறினான். படிகளை ஏறுவதை மட்டுமே எண்ணியதால் வலியை நினைக்கவில்லை. படிகளில் ஏறி மலையை அடைந்து கோவிலில் உள்ள சிவன், முருகன் நந்தி இவர்களை வணங்கி அங்கே உள்ள விபூதியையும் கையில் எடுத்துக் கொண்டு விரைவாக படிகளில் இறங்கினான். செல்வம் இருக்கும் இடத்திற்கு சுரேஷ முதலில் வந்து சேர்ந்து அவருக்கு விபூதி பிரசாதத்தை கொடுத்தான்.

செல்வம் விபூதியை கண்டு மெய் சிலிர்த்தார். எல்லோர் முன்பும் சுரேஷை பாராட்டி அவனுக்கு பரிசு தொகையாக ரூபாய் 500 கொடுத்தார். செல்வம்' குழந்தைகளே நான் படிகள் மீது ஏறி பிறகு நான் இருக்கும் இடத்திற்கு முதலில் வருவதைத் தான் போட்டி என்றேன். ஆனால் சுரேஷ் படிகளில் ஏறி இறைவனையும் வணங்கி விபூதியையும் எடுத்து வந்தான். ஒரு பழமொழி உண்டு வெட்டிக்கொண்டு வா என்றால் கட்டிக் கொண்டும் வருவான்' அதைத்தான் சுரேஷ் செய்துள்ளான். நான் அறிவித்த பரிசுத்தொகை ரூபாய் 200. ஆனால் சுரேஷ் செயலை கண்டு நான் மகிழ்ந்தேன். எனவே பரிசு தொகையாக ரூபாய் 500 கொடுத்தேன்' என்று கூறி சுரேஷுக்கு ஆசி கூறினார். கீதாவையும் பாராட்டினார்.

கீதாவிற்கு மகிழ்ச்சியால் வார்த்தைகளே வரவில்லை. கீதா, சுரேஷ் இருவரும் செல்வத்திற்கு நன்றி கூறி இறைவனை வணங்கி வீடு நோக்கி. சென்றனர். அப்போது சுரேஷ்' அம்மா இந்த பணத்தை வைத்துக்கொண்டு ஏதாவது தொழில் செய்யுங்கள்' என்றான். அப்போது அவர்கள் செல்லும் வழியில் உள்ள தேயிலை தோட்டத்திலிருந்து ஒரு மூதாட்டி வெளியே வந்தார். அவரைப் பார்த்தவுடன் கீதாவிற்கு திடீரென ஒரு எண்ணம் தோன்றியது. எனவே மூதாட்டியை பார்த்து' அம்மா இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நான் டீ போட்டு தரவா' என்று கேட்டாள். அதற்கு அந்த மூதாட்டி' அம்மா கொஞ்ச நேரம் இரு அம்மா' என்று கூறி மற்றவர்களிடம் கலந்து பேசிவிட்டு வந்தார்.

கீதாவிடம்' அம்மா நீ காலை, மாலை இரண்டு நேரமும் டீ போட்டு கொண்டு வா அம்மா. நாங்கள் கீழே போய் டீ வாங்கி வந்து தான் குடிக்கிறோம். ஒரு டீ ரூபாய் பத்து ஆகிறது. நீ



nbn-COMMERCIAL

குறைத்து ஒரு டீ ரூபாய் எட்டுக்கு கொடு. நாங்கள் முப்பது பேர் இருக்கிறோம். உனக்கு இது சரியா'. என்றார்.

கீதா உடனே' சரி அம்மா. நான் நாளையிலிருந்து காலையிலும், மாலையிலும் டீ கொண்டுவந்து தருகிறேன்' என்று கூறினாள். வீட்டிற்கு வரும் வழியில் விறகு குச்சிகளை எடுத்து வந்தாள். காலையில் இறைவனை வேண்டி கடைக்கு சென்று டீக்கு தேவையான பால், சர்க்கரை, டீத்தூள், ஏலக்காய் போன்ற பொருட்களை ரூபாய் 300க்கு வாங்கினாள். வீட்டிற்கு வந்து டீ போட்டு காலையிலும், மாலையிலும் கொண்டு சென்று கொடுத்தாள். அவர்கள் கீதாவிற்கு ஒரு டீ எட்டு ரூபாய் வீதம் ரூபாய் 480 கொடுத்தார்கள். அவர்களுக்கு கீழே சென்று டீ வாங்கி வந்து குடிப்பதை கணக்கு பார்த்தால் ரூபாய் 120 லாபம் கிடைக்கிறது. அதேபோல கீதாவிற்கு பொருட்கள் வாங்கியது போக ரூபாய் நூத்தி என்பது லாபம் கிடைத்தது மேலும் கீதா வீட்டில் உள்ள அனைவரும் டீ குடித்தனர். இறைவன் அருளால் தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கும், கீதாவிற்கும் ஆக இருவருக்குமே லாபம் கிடைத்தது.

பிறகு படிப்படியாக கீதா தொழிலாளர்களுக்கு வடை, போண்டா, பஜ்ஜி செய்து கொடுத்தாள். இவ்வாறு உழைத்து சிறியதாக ஒரு தேநீர் கடையும் வைத்து நடத்தினார். எனவே இறைவன் அருளாலும், உழைப்பாலும் எப்போதும் முன்னேற்றம் கிடைக்கும் என்பதை நாம் அறியலாம். ஏழ்மை என்ற நோய்க்கு உழைப்பு என்ற மருந்தை கொடுத்தால் நோய் அதாவது ஏழ்மை மறைந்து விடும். என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். உழைப்பால் உயர்ந்தவர்கள் பலரை நாம் அறிவோம். மீண்டும் சந்திப்போம்.

*நன்றி வணக்கம்!*

அன்புடன்

கலாவதி

ஊட்டி

*****

# ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்களின் திருத் தொண்டர்கள்

*அணிந்துரை (ரா. கணபதி அண்ணா)*

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே " என்றார் ஔவை பாட்டி. பகவானை விடவும் பாகவதர்களுக்கு ஏற்றம் கொடுப்பது நமது மரபு. எத்தனையோ புராணங்கள் இருப்பினும், சிவபெருமானது பரம பக்தர்களான அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரிதைகளைக் கூறும் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம்தான் "பெரிய புராணம்" என்ற மஹிமை வாய்ந்த அடைமொழியை பெற்றிருக்கிறது.

சிவபெருமானும், பராசக்தியும் சேர்ந்து எடுத்த அவதாரமான ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்களின் ஏராளமான தொண்டர்களது வாழ்க்கை வரலாறுகளைக் கூறும் ஒப்பற்ற நவீன பெரிய புராணமே, நம் கையில் உள்ள இப்பெரும் நூல். பக்தருலகின் பெரும் பேராக, இப்படியொரு



nbn-COMMERCIAL

நூலினை முதிர்ந்த பழமாகிய பிரம்மஸ்ரீ ஏ. குப்புசாமி அய்யரவர்கள் ஆக்கிப் படைத்து ஒரு பெரிய தேவையை பூர்த்தி செய்து பேருபகாரம் புரிந்திருக்கிறார்.

இப்படிப்பட்டதொரு நூல் வெளிவருவது ஒரு புறம் மிக்க மனநிறைவு அளித்தாலும் இன்னொரு புறம் ஒரு பெரும் குறையும் உள்ளது. என்னவெனில், இத்தகைய ஒரு நூல் வெளிவரவேண்டும் என்று தொண்டர் நாயகனான ஸ்ரீ மகா பெரியவர்களே விரும்பினார். ஆனால் அவர் மனம் குளிரும் வகையில், இன்று அது வெளி வரும்போது, அவர் ஸ்தூல உருவில் இல்லாததே அக்குறை. ஸ்தூல உருவில் இல்லாவிட்டாலும் அவரேதான் ஸூக்ஷ்மமாக நூலாசிரியரை இயக்கி இதனை படைக்கச் செய்திருக்கிறார் என்றும், இன்றும் தமது அருட் சரீரத்தில் இருந்து கொண்டு அவர் நூலைப் பார்வையிட்டு உளம் கழிக்கிறார் என்றும் உறுதியாக நம்பிக் குறையைப் போக்கிக் கொள்வோமாக.

இப்படியொரு நூல் உருவாக வேண்டுமென்ற விருப்பத்தை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன், ஸ்ரீ மஹாபெரியாவாள் என்னிடம் வெளியிட்டார். அன்று அவர் இட்ட வித்தைதான் பல்லாண்டுகளுக்குப் பின்பு இன்று நூலாசிரியர் அவர்கள் மஹா விருக்ஷமாக்கி கொடுத்திருக்கிறார்.

மஹாபெரியவா வித்திட்டு முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. 1967-ல் அவரது பீடாரோஹண மணிவிழா நடைபெற்றது. அதனை முன்னிட்டு அவரது வாழ்க்கை வரலாற்றை எழுத நான் விரும்பினேன். அப்போது, அவர், "உனக்கு இந்த பெரியவாள் சரித்திரத்தைப் பிரகாசப் படுத்த வேண்டும் என்று எவ்வளவு ஆசையாக இருக்கிறதோ, அதுபோல எனக்கும் பல பெரியவர்களுடைய சரித்திரங்கள் லோகத்தில் பிரகாசிக்க வேண்டுமென்று இருக்கிறது" என்றார்கள். அவர் குறிப்பிட்ட அந்த பெரியோர்கள் யாரென்று கூறினார். அவருக்கு பல்வேறு துறைகளில் கைங்கர்யம் செய்த ஏராளமான தொண்டர்கள்தாம் அப் பெரியோர் என்று கூறினார்.

அனந்த கல்யாணகுண நிலையரான, ஸ்ரீ மஹாபெரியாவாள் எளிமை நன்றியறிதல் ஆகிய கல்யாண குணங்களுக்கும் உருவமாவார். அதனால், தமக்கு சொந்தத்தில் யோக்கிதாம்சங்கள் போதாதா போதிலும் தாமும் ஒரு பெரியவாள் என்று சோபிப்பதற்குக் காரணமே தமது தொண்டர்கள் செய்த தியாக சேவைதான் என்று சொல்லி, "அவர்களையெல்லாம் பற்றி லோகத்துக்கு தெரிய வேண்டும்" என்று மனமாரக் கூறினார்.

அவர் சொன்னது போன்றதொரு தொண்டர் வரலாற் எழுதுவதென்பது மலைப்பு தட்டும் காரியம்தான். அவரது நீண்ட நெடிய வாழ்வில், எத்தனை எத்தனை பேர்கள் அவருக்குத் தொன்று புரிந்து இருப்பார்கள்? பல்துறை வித்தகரான அவர் அப் பல துறையிலும், தமக்கே உரிய சிந்தனா சக்தியுடன் எத்தனை விதமான திட்டங்களை வகுத்து, அவற்றை நிறைவேற்றும் கருவிகளாக எத்தனை பேரை தொண்டு செய்ய வைத்திருப்பார்? அவ்வளவு தொண்டர்களின் சரிதங்களும் அறிந்து கொண்டு, அவற்றை ருசிகரமான இலக்கியமாக படைப்பது என்றால்,



nbn-COMMERCIAL

மலைப்புத் தட்டும் சாஹசம் தானே? பலவீனனான என்னால் இயலாத காரியம் அது என்று விட்டு விட்டேன். ஆயினும், மஹாபெரியாவாள் அவ்வளவு ஆவலுடன் விரும்பிய விஷயமாதலால் வேறெவரேனும் அப்பணி செய்யத்தக்கவராகக் கிடைப்பார் என்று எண்ணி வந்தேன்; இப்படியே ஆண்டுகள் பலப் பல ஓடின.

கடைசியாக சுமார் மூன்றாண்டுக்கு முன்புதான் இவ்வரலாற்றுப் பணி புரியக்கூடிய ஓர் அஸாத்ய சாதகரும் இருக்கவே செய்கிறார்; அவர் பிரம்மஸ்ரீ ஏ. குப்புசாமி அய்யர் அவர்கள்தாம் என்று பளிச்சிட்டது. அதுவும் ஸ்ரீ மஹா பெரியவாளின் அருட் தூண்டுதலாலேயேதான் இருக்க வேண்டும்.

ஸ்ரீ அய்யர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். எண்பத்தைந்து பிராயத்தினராயினும் அவர் இளைஞரும் வேட்கும் உற்சாகத்துடன் இம் மாபெரும் திருப்பணியினை மனமொப்பி ஏற்று, அதில் முழு மூச்சுடன் குதித்து விட்டார். மஹா பெரியவாள் குறித்த சேவை என்பதில் அவருக்கு அத்தனை ஆர்வம்! எடுத்த பணியை அந்தரங்க பூர்வமாகத் தொடர்ந்து செய்து இனிதே நிறைவேற்றியும் விட்டார்!

இந்நூலினை எழுத அவருக்கு உள்ள தகுதிகள் ஏராளம். மஹா பெரியவர்களின் தொண்டர்களில் இன்று நம்மிடையே வாழ்வோரின் மிக மிக மூத்தோரான ("சீனியர் மோஸ்ட்") தொண்டர் ஸ்ரீ ஏ. குப்புசாமிஐயர் அவர்கள்தான். வயதால் தொண்டுக் கிழவர். செயலால் தொண்டே உருவான கிழார் அவர். பெரியவாள் தொடர்பாக அவர் புரிந்துள்ள தொண்டுகள் அபாரமானவை. பட்டப் படிப்பும், உபாத்தியாயர் பயிற்சியும் பெற்று, பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய அவர் நூலாசிரியராகவும், ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு அறிய, பெரிய சேவை செய்து இருக்கிறார். ஸ்ரீ பகவத் பாதாள் குறித்தும், நமது பூஜ்ய காஞ்சி ஸ்ரீமடம் குறித்தும் வேறு பல பொருள்கள் குறித்தும் ஸ்ரீ மஹா பெரியவர்கள் கொண்டிருந்த கருத்துக்களில், பல ஸ்ரீ அய்யர் அவர்களின் எழுத்துக்களாகப் பரிமளித்து இருக்கின்றன. பல விஷயங்களுக்கு ஸ்ரீ மஹா பெரியவாளே அஸ்திவாரம் போட்டுக் கொடுத்து, அதன் மேல் ஸ்ரீ அய்யர் அவர்கள் ஆராய்ச்சி செய்து, நூல்கள் எனும் கட்டிடங்களை எழுப்பியுள்ளார். இப்படி ஆங்கிலத்தில் பல உத்தமமான நூல்களும், தமிழிலில் பல உயரிய கட்டுரைகளும், படைத்துள்ளார். இதில் குறிப்பிட்டு போற்றவேண்டிய அம்சம் பெயர், புகழ், பொருள் முதலிய எதையும் கருதாமல், அவர் அனாமதேயமாகவும் அன்புப் பணியாகவுமே இச் சீரிய எழுத்துத் தொண்டைப் புரிந்திருப்பதுதான்.

ஸ்ரீ மஹா பெரியவாள் குறித்து, அமுத விருந்தாக நிறைய எழுதி இருக்கிறார். தாமே எழுதியது மட்டுமன்றி, ஏராளமான பிற பக்தர்களது அஞ்சலிக் கட்டுரைகளையும் தொகுத்து வெளியிட்டு இருக்கிறார். இவ்வகையில் ஸ்ரீ பெரியவாளின் சதாப்தி விழா மலர்களாக, வெளியிடப்பட்ட மூன்று பகுதிகள் கொண்ட, "A Hundred Years of Light" என்ற தொகுப்பு நூலை அடிக்கோடிட்டு சொல்ல வேண்டும். நூற்பணியோடு இன்னும் பல விதங்களிலும் ஸ்ரீ மஹாபெரியாவாள் இட்ட பணிகளையெல்லாம் ஸ்ரீ அய்யர் செவ்வனே ஆற்றியிருக்கிறார். பல முக்கியமான



nbn-COMMERCIAL

விஷயங்களுக்காக ஸ்ரீ மஹா பெரியவாளின் தூதராக அவர் அநேகப் பிரமுகர்களிடம் நேரில் தொடர்பு கொண்டு, ஓடி ஆடி செய்த பணிகள் பலப் பல. இன்று இத் தள்ளாத வயதிலும் இன்றைய நமது பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியர்களின் ஆக்ஞப்படி எழுத்து பணிகளை ஊக்கத்துடன் தொடர்ந்து வருகிறார். ஆஸ்திக உலகுக்கு ஸ்ரீ ஐயரவர்கள் அறிய கொடையாகவும் மஹா பெரியவாள் குறித்த இலக்கிய மாலையில் ஒரு ரெத்தினமாகவும் தற்போது இது திருத்தொண்டர்கள் புராண-நவீனம் வெளியாகிறது. இதுவே அய்யரது திருத்த தொண்டுக்கும் சிரோமணி எனலாம்.

ஸ்ரீ மகா பெரியவாளின் ஸாக்ஷாத் சிஷ்யராகத் தேர்ந்த அறிவும், ஆழ்ந்த ஆராய்ச்சிப்பாங்கும், நுணுக்கமாக கவனிக்கும் பார்வையும், காரியச் செவ்வியும், எழுத்தாற்றலும், கூறிய ஞாபக சக்தியும் படைத்த அய்யர் ஒருவரால்தான் இத்தகையதொரு நூலினைப் படைக்க முடியும். அப்பப்பா! எத்தனைத் துறைகளில் இங்கே திருத்த தொண்டர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். வித்வத் சிம்மங்களில் இருந்து பல்லக்கு தூக்கிய போகி வரையில் எத்தனை விதமான நவீன நாயன்மார்களை அவர் தம் கண் முன்பு நிறுத்தியிருக்கிறார். ஸ்ரீ மகா பெரியவாள் பட்டத்துக்கு வருவதற்கும் முற்காலத்திலிருந்தே இந்நூலுக்கு தேவைப்படும் விஷயங்களில் ஒன்று கூட விட்டுப் போகாமல் சேகரித்து அவர் கொடுத்திருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.

தொண்டர்களின் வாழ்க்கை விவரம் மட்டும் திஜேரிவிக்கும் வெறும் Biodata தொகுப்பாக இந்நூலாகிவிடாமல் ஒவ்வொரு தொண்டருடனு ரசமயமான ஸ்ரீ மஹா பெரியவாள் கொண்டிருந்த சுவாரஸ்யமான தொடர்பையும் நூல் கூறுவதால், இலக்கியத் திறம் பெற்று ஒலிக்கிறது. இதில் வரும் நாயன்மார்களின் மூல நாயகரான ஸ்ரீ மகா பெரியவாளின் பல பரிமாணங்களைத் தரிசித்து ஆனாந்திக்கிறோம். மொத்தத்தில் சிவபெருமானைக் குறித்த ' பெரியபுராணம்' திருமாளைக் குறித்த 'மஹா பக்த விஜயம்', 'பக்தமாலை' ஆகிய நூல்களைப்போல் நமது ஸ்ரீ மஹா பெரியவாளைக் குறித்தும், ஒன்று மலர்ந்து விட்டது என்று மனம் நிறைகிறோம். பலவகையிலும் பெரியவரான ஸ்ரீ அய்யர் அவர்களின் இப்புனித கிரந்தத்திற்கு சிறியவனாக நான் அணிந்துரை எழுதுவது அதிகப்பிரசாங்கமே ஆயினும், அவரது அன்புக் கட்டளைக்குப் பணிந்தே இதனை எழுதி இருக்கிறேன். அற்புதமான, அவசியமான இந்நூலை நமக்கு வழங்கியுள்ள அவருக்கு என் சார்பாகவும், பக்த கொடிகளின் சார்பாகவும் நன்றி நமஸ்காரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை உருவாக்கச் செய்திருப்பதில் அடியேனுக்கு ஒரு சிறு பங்கு அளித்த ஸ்ரீ மஹா பெரியவாளின் திருவடிகளில் அஞ்சலி செலுத்துகிறேன்.

சென்னை-600041

ரா. கணபதி

26-8-1999.

*****



nbn-COMMERCIAL